033

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சமூகவிஞ்ஞானத்தில் சான்றிதழ் கற்கை நெறி - மட்டம் II,
இறுதிப் பரீட்சை -2006
அரசியல் விஞ்ஞானத்தின் அடிப்படை மூலங்கள் – SSF 2301
காலம் : மூன்று (3) மணித்தியாலங்கள்

திகதி : 19.11.2006 நேரம் : பி.ப. 1.00 – 04.00 வரை

ஐந்து (5) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.
ஒவ்வொரு வினாவுக்கும் 20 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

1. அரசாங்கம் என்றால் என்ன? அரசாங்க அமைப்புக்களில் ஜனநாயகத்தின் சிறப்பியல்புகளை விளக்குக. (20 புள்ளிகள்)

2. அதிகார வேறாக்கத்தின் அடிப்படைகள் யாது? இதில் மொன்டஸ்கியூவின் பங்களிப்பினை விளக்குக. (20 புள்ளிகள்)

3. (அ) இலங்கை தேசிய இயக்கம் ஒரு சுதந்திர இயக்கமாக நீர் கருதுவீரா? (10 புள்ளிகள்)
   (ஆ) இலங்கை தேசிய இயக்கத்தின் குறைபாடுகள் யாவை? (10 புள்ளிகள்)

4 (அ) கோல்புறூக் கமறன் ஆணைக்குழுவினால் அறிமுகப்படுத்தப்பட்ட சீர்திருத்தத்தின் முக்கிய அம்சங்களை வரிசைப்படுத்துக. (10 புள்ளிகள்)
   (ஆ) கோல்புறூக் கமறன் ஆணைக்குழுவினால் அறிமுகப்படுத்தப்பட்ட சீர்திருத்தங்களின் சமூகப் பொருளாதார விளைவுகள் யாது? (10 புள்ளிகள்)

5. (அ) விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறையினை விளக்குக. (10 புள்ளிகள்)
   (ஆ) தனி அங்கத்தவர் தேர்தல் முறையினைவிட (எளிய பல அங்கத்தவர் முறை) விகிதாரப் பிரதிநிதித்துவ முறை சிறப்பானது. விளக்குக. (10 புள்ளிகள்)

6. டொனமூர் ஆணைக்குழுவின் நான்கு சீர்திருத்த ஆலோசனைகளை விளக்குக. (20 புள்ளிகள்)

7. 1972 ஆம் ஆண்டின் முதலாம் குடியரசு அரசியலமைப்பினை பின்வருவனவற்றோடு தொடர்புபடுத்தி ஆராய்க.

(அ) தேசிய அரசு பேரவைக்கு அங்கத்தவர்களை தெரிவு செய்தல்.

(ஆ) பிரதமமந்திரி

(இ) ஜனாதிபதியின் அதிகாரங்கள்

(ஈ) நீதி முறைமை

(4x5=20 புள்ளிகள்)

8. (அ) 1978ஆம் ஆண்டு நிறைவேற்றுமுறையிலான அரசாங்கத்தின் பிரதான இயல்புகளை எழுதுக.

(10 புள்ளிகள்)

(ஆ) 1978 ஆம் ஆண்டின் இரண்டாவது குடியரசு அரசியல் யாப்பின்படி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களை பரிசீலனை செய்து விளக்குக.

(10 புள்ளிகள்)

9. பின்வருவனவற்றில் நான்கிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

(அ) சர்வஜன வாக்கெடுப்பு

(ஆ) நீதிச் சுதந்திரம்

(இ) அடிப்படை உரிமைகள்

(ஈ) ஓம்புட்ஸ்மன்

(உ) சோல்பெரி ஆணைக்குழு

(4x5=20 புள்ளிகள்)

*** பதிப்புரிமையுடையது ***